# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 354 | 4 Pages | 16.7.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 354 | 4 பக்கங்கள் | 16.7.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


# மாநிலங்களவையிலும் குறைந்த பா.ஜ.க. பலம்: பிரதமர் மோடிக்கு சோதனைக்கு மேல் சோதனை

டெல்லி, ஜூலை 16

மாநிலங்களவையில் நியமன எம்.பி.க்கள் நான்கு பேர் ஓய்வு பெற்றுள்ளதால் ஆளும் பாஜகவின் பலம் 86ஆக சரிந்துள்ளது. நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா சட்டமாக வேண்டுமானால், இரண்டு அவைகளிலும் நிறைவேற்ற வேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக அசுர பலத்தில் இருந்த ஆளும் பாஜக, நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் பெரும்பான்மையை இழந்து கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு ஆட்சி அமைத்தது. இந்த நிலையில், மாநிலங்களவையிலும் பாஜகவின் பலம் தற்போது சரிந்துள்ளது. மாநிலங்களவையின் மொத்த பலம் 250 ஆகும். ஆனால், ஜம்மு காஷ்மீரை இரண்டு மாநிலங்களுக்கு பிரிக்கப்பட்டதால் அதன் மொத்த பலம் தற்போது 245ஆக உள்ளது. மாநிலங்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட மாநிலங்களவையில் 233 உறுப்பினர்கள், மாநில/யூனியன் பிரதேசங்களின் சட்டப்பேரவை உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகின்றனர்.மீதமுள்ள 12 பேர், நியமன எம்.பி.க்கள் ஆவர். கலை, இலக்கியம், அறிவியல், சமூக சேவை ஆகியவற்றில் தனித்துவமாக செயலாற்றியவர்களை அங்கீகரிக்கும் வகையில் நியமன எம்பிக்களை மத்திய அரசு தேர்வு செய்து வருகிறது. மத்திய அரசு நியமனம் செய்வதால், மசோதாக்கள் கொண்டு வரும்போது, இவர்கள் பொதுவாக மத்திய அரசுக்கு ஆதரவாகவே வாக்களிப்பார்கள்.இந்நிலையில், மத்திய பாஜக அரசால் நியமனம் செய்யப்பட்ட ராகேஷ் சிங், ராம் சாகல், சோனல் மான்சிங், மகேஷ் ஜெத்மலானி ஆகியோரின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. இதன் காரணமாக, பாஜகவின் பலம் தற்போது 86ஆக குறைந்துள்ளது. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் பலம் 101ஆக குறைந்துள்ளது.245 எம்.பி.க்கள் உள்ள மாநிலங்களவையில் பெரும்பான்மைக்கு 113 பேரின் ஆதரவு தேவை என்பதால், கூட்டணி கட்சிகளை தாண்டி மற்ற கட்சிகளை நம்பி இருக்க வேண்டிய சூழல் பாஜகவுக்கு ஏற்பட்டுள்ளது. மாநிலங்களவையில் இந்தியா கூட்டணியின் பலம் 87 ஆக உள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு 26 எம்.பி.க்களும் மேற்குவங்கத்தை ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு 13 எம்.பி.க்களும் டெல்லி, பஞ்சாபை ஆண்டு வரும் ஆம் ஆத்மிக்கும் தமிழ்நாட்டை ஆளும் திமுகவுக்கும் தலா 10 எம்.பி.க்கள் உள்ளனர்.பாஜக தலைமையிலான கூட்டணி, இந்தியா கூட்டணி என இரண்டிலும் இணையான கட்சியாக தெலங்கானா முன்னாள் முதலமைச்சர் சந்திரசேகர் ராவின் பாரத் ராஷ்டிரிய சமிதி உள்ளது. இக்கட்சிக்கு 4 எம்.பி.க்கள் உள்ளனர். இதை தவிர, அதிமுக உள்ளது. பாஜகவின் முன்னாள் கூட்டணி கட்சியான அதிமுகவுக்கு 4 எம்.பி.க்கள் உள்ளனர். அதேபோல, பாஜகவை எதிர்க்காமல் சமூகமான உறவை பேணி வரும் ஜெகன் மோகன் ரெட்டியின் ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ்க்கு 11 எம்.பி.க்கள் உள்ளனர்.

அதிமுக, ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும், கடந்த காலத்தில் முக்கிய விவகாரங்களில் பாஜகவுக்கு ஆதரவான நிலைபாட்டை எடுத்துள்ளது. இதன் காரணமாகவே, பாஜகவால் முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற முடிந்தது. இந்த கட்சிகளை தவிர்த்து ஒடிசாவின் முன்னாள் முதலமைச்சரான நவீன் பட்நாயக்கின் பிஜூ ஜனதா தளம் கட்சி உள்ளது. அதிமுக, ஒய்.எஸ். ஆர். காங்கிரஸை போன்று பிஜூ ஜனதா தளமும் நாடாளுமன்றத்தில் பாஜகவுடன் இணக்கமான போக்கையே கடைபிடித்து வந்தது.ஆனால், ஒடிசாவில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் பிஜூ ஜனதா தளத்தை வீழ்த்தி பாஜக ஆட்சி அமைத்தது. இதையடுத்து, இனி பாஜகவுக்கு ஆதரவாக செயல்பட மாட்டோம் என நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார். எனவே, முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற அதிமுக, ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் போன்ற கட்சிகளின் ஆதரவு பாஜகவுக்கு தேவைப்படுகிறது. மாநிலங்களைவையில் தற்போது மொத்தம் 20 இடங்கள் காலியாக உள்ளன. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் நடத்தப்பட்ட 11 இடங்களில் இந்த ஆண்டு தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றன. இதில், மகாராஷ்டிரா, அசாம், பீகார் ஆகிய மாநிலங்களில் தலா இரண்டு இடங்களும், ஹரியானா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், தெலுங்கானா, திரிபுரா ஆகிய மாநிலங்களில் தலா ஒரு இடமும் காலியாக உள்ளன.பாஜக தலைமையிலான கூட்டணிக்கு அசாம், பீகார், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் திரிபுரா ஆகிய 7 மாநிலங்களில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகள் உள்ளது. மஹாராஷ்டிராவில் தனது கூட்டணி முடிவை தொடர்ந்தால் அங்கிருந்து மேலும் இரண்டு எம்பிக்களை பெற முடியும். எனவே மாநிலங்களவையில் பலத்தைக் கூட்ட பாஜக என்ன செய்யப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மதுரை அருகே கப்பலூர் சுங்கச்சாவடியில் உள்ளூர் மக்களுக்கு தற்காலிக விலக்கு

மதுரை, ஜூலை 16

திருமங்கலம் அருகே கப்பலூரில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குற்பட்ட டோல்கேட்டில் ஜூலை 10ம் தேதி முதல் திருமங்கலம் உள்ளூர் வாடகை வாகனங்கள் அனைத்தும் 50 சதவீதம் சுங்ககட்டணம் செலுத்திதான் டோல்கேட்டை கடந்து செல்லவேண்டும் என தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம் அறிவித்தது. இது திருமங்கலம் உள்ளூர் மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து கப்பலூர் டோல்கேட் எதிர்ப்பு ஒருங்கிணைப்பு குழுவினர், பல்வேறு சங்கங்கள் கப்பலூர் டோல்கேட்டை தங்களது வாகனங்களுடன் முற்றுகையிட்டனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீஸ் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். தொடர்ந்து பிற்பகல் பொக்லைன் இயந்திரத்துடன் டோல்கேட்டை இடிக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். இந்த விவகாரத்தில் அமைதி பேச்சுவார்த்தை வரும் 15ம் தேதி திருமங்கலத்தில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் டோல்கேட் விவகாரத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படுமென்றும், அதுவரை திருமங்கலம் பகுதி வாகனங்கள் கட்டணமின்றி சென்று வரலாம் என முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில், திருமங்கலம் கப்பலூர் சுங்கச்சாவடி விவகாரத்தில் அமைச்சர் மூர்த்தி தலைமையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை இன்று நடைபெற்றது. உள்ளூர் வாகனங்களுக்கு விலக்குதரக் கோரி நடந்த போராட்டம் எதிரொலியாக ஆட்சியர் அலுவலகத்தில் இன்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர் மூர்த்தி, மாவட்ட ஆட்சியர், தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர். கப்பலூர் சுங்கச்சாவடி உள்ளூர் வாகன விலக்கு விவகாரத்தில் தேசிய நெடுஞ்சாலை செயலருடன் அடுத்த வாரம் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. மேலும் தற்காலிகமாக உள்ளூர் வாகனங்களுக்கு முழு விலக்களிக்கும் நடைமுறை தொடரும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# தூத்துக்குடி துப்பாக்கி சூடு விவகாரத்தில் சி.பி.ஐ. நியாயமாக விசாரணை நடத்தவில்லை: சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி கருத்து

தூத்துக்குடி, ஜூலை 16

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தில் எந்த அதிகாரிகளின் பெயரை குறிப்பிடாமல் யார் மீது விசாரணை நடத்திவருகிறீர்கள் என சிபிஐக்கு கண்டனம் தெரிவித்துள்ள சென்னை உயர்நீதிமன்றம், இது சிபிஐயின் கையாலாகத்தனத்தை காட்டுவதாக அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை முடித்து வைத்து தேசிய மனித உரிமை ஆணையம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் விசாரணை நடைபெற்று வருகிறது.

வழக்கு நீதிபதிகள் எஸ் எஸ் சுந்தர் மற்றும் செந்தில்குமார் அடங்கிய அமர்வில் ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, வழக்கில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டிருந்த தூத்துக்குடி துணை காவல் கண்காணிப்பாளர் லிங்க திருமாறன் தரப்பில், மனித உரிமை ஆணைய சட்டத்தின் படி ஏற்கனவே முடிக்கப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்றும், மாநில மனித உரிமை ஆணையமும், நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையமும் விசாரித்த வழக்கை மீண்டும் விசாரிக்க முடியாது என்றும் வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. நடந்த சம்பவத்திற்கு இதுவரை எந்த அதிகாரிகளும் வருந்தவில்லை. அவர்களுக்கு எதிராக கொலை வழக்கு தொடரப்பட வேண்டும் என்று தெரிவித்த நீதிபதிகள், துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டது யார்? யார் பொறுப்பேற்பார்க்ள் எனக் கேள்வி எழுப்பியிருந்தனர்.இந்த நிலையில் வழக்கு மீண்டும் விசாரணை வந்தது.

அப்போது சிபிஐ தரப்பில், ஏற்கனவே இது குறித்து கிழமை நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும்,

ஆனால் அதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது மனுதாரர் இவ்வாறு கோரிக்கை வைக்க முடியாது என்று தெரிவித்தார்.

இதற்கு அதிருப்தி தெரிவித்த நீதிபதிகள், தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் நடந்த காலத்தில் பணியாற்றிய காவல் துறையினர் உள்ளிட்ட அதிகாரிகளின் சொத்து விவரங்கள் விசாரிக்க வேண்டும் என்று தமிழக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டுள்ளனர். சம்பவம் நடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் சம்பவத்துக்கு பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு பின்பும் இந்த கணக்கெடுப்பு நடத்த வேண்டும்,

இரண்டு வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், சிபிஐ நியாயமாக விசாரணை நடத்தவில்லை, இது சிபிஐ கையாளகதனத்தை காட்டுகிறது,

பொது மக்களை புழு மாதிரி நசுக்கி உள்ளார்கள், இந்த வழக்கின் முக்கியத்துவத்தை உணராமல் விசாரித்து வருகிறீர்கள், எந்த அதிகாரிகளையும் குறிப்பிடாமல் யார் மீது விசாரணை நடத்திவருகிறீர்கள் என கடும் கண்டனம் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும் எந்த அதிகாரியும் தவறு செய்யவில்லை என எப்படி அறிக்கை தாக்கல் செய்ய முடியும் ? எனவும் கேள்வி எழுப்பினர்.

## நேபாளத்தின் புதிய பிரதமராக கே.பி.சர்மா ஒலி ஒருமனதாக தேர்வு



காத்மண்டு, ஜூலை 17

நேபாளத்தில் கடந்த 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த பாராளுமன்ற தேர்தலில் எந்தக் கட்சியாலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை பெறமுடியாமல் போனது. இதனால் சி.பி.என். மாவோயிஸ்டு கட்சியின் தலைவர் புஷ்பகமல்தஹல் என்கிற பிரசந்தா, முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலியின் நேபாளகம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட 4 கட்சிகளுடன் கூட்டணி அமைத்து 3வது முறையாக பிரதமராக பதவியேற்றார்.

அதன்பிறகு கூட்டணி அரசுக்கான ஆதரவை நேபாள கம்யூனிஸ்ட் கட்சி திரும்ப பெற்றதையடுத்து, நேபாள காங்கிரசுடன் கூட்டணி அமைத்து பிரதமர் பதவியில் நீடித்தார் பிரசந்தா.

தொடர்ந்து ஏற்பட்ட கூட்டணி மாற்றத்தால் பிரதமர் பிரசந்தா 4 முறை நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தி அதில் வெற்றி பெற்றார்.

இதற்கிடையே, நேபாளத்தில் ஜூலை 12ம் தேதி ஐந்தாவது முறையாக நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த கோரி பிரதமர் பிரசந்தா பாராளுமன்ற செயலகத்திற்கு கடிதம் எழுதினார்.

இந்நிலையில், நேபாள பிரதிநிதிகள் சபையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் பிரதமர் பிரசந்தா தோல்வி அடைந்தார். அவருக்கு ஆதரவாக 63 வாக்குகள் மட்டும் கிடைத்தன. அவருக்கு எதிராக 194 வாக்குகள் பதிவாகின.

இதனையடுத்து, நேபாள நாட்டின் புதிய பிரதமராக கே.பி.சர்மா ஒலி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். கே.பி.சர்மா ஒலிக்கு நேபாள குடியரசுத் தலைவர் ராம் சந்திரா நாளை 11 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

கே.பி.சர்மா ஒலி நேபாளத்தின் பிரதமராக 2015 அக்டோபர் 11, முதல் 2016 ஆகஸ்ட் 3, வரையிலும் பின்னர் 2018 பிப்ரவரி 5, முதல் 2021 ஜூலை 13, வரையிலும் பணியாற்றினார். இப்போது மூன்றாவது முறையாக நேபாளத்தின் பிரதமராக கே.பி.சர்மா ஒலி பதவியேற்கவுள்ளார்.

## புதிய வரலாறு படைத்த பிரபல யூடியூபர் மிஸ்டர் பீஸ்ட்




அமெரிக்கா, ஜூலை 16

உலக அளவில், மக்களின் சுவாரஸ்யமான பொழுதுபோக்கு சமூக வலைதளமாக யூடியூப் விளங்குகிறது. நமக்கு ஏதாவது ஒன்று தெரியவில்லை என்று நினைத்தால் அதற்கு நிச்சயமாக யூடியூப்பில் விடை கிடைக்கும்.

யூடியூபில் சேனல் தொடங்குவது எளிது என்பதால், இணைய பயனர்கள் பலரும் தங்களுக்கென்று ஒரு சேனலை தொடங்கி அதில், தங்களுக்கு தெரிந்த விஷயங்களை பதிவிட்டு வருகின்றனர்.

இதில் அமெரிக்காவை சேர்ந்த மிஸ்டர் பீஸ்ட் என்ற யூடியூப் பக்கம் தொடர்ந்து புதிய உச்சத்தை எட்டி வருகிறது. ஜிம்மி டொனால்ட்சன் என்பவர் இந்த சேனலை நடத்தி வருகிறார்.

பல்வேறு சாகசங்கள் செய்து புகழ் பெற்ற இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு யூடியூப்பில் அதிக சந்தாதாரர்கள் என்ற இந்தியாவை சேர்ந்த இசை நிறுவனமான டிசீரிசை மிஞ்சினர்.

2006ம் ஆண்டு யூடியூபில் இணைந்த டிசீரிஸ் நிறுவனத்திற்கு 26.6 கோடி சந்தாதாரர்கள் இருந்த நிலையில் கடந்த மாதம் அதனை மிஞ்சி மிஸ்டர் பீஸ்ட் யூடியூப் பக்கம் முதலிடத்தை பிடித்தது.

மிஸ்டர் பீஸ்ட் சேனலை தொடங்கிய ஜிம்மி டொனால்ட்சன் சுமார் 800 வீடியோக்களை மட்டுமே அதில் பதிவிட்டு இருந்தார்.

ஆனால் ஒவ்வொரு வீடியோவும் பல லட்சம் பார்வைகளை பெற்று புதிய உச்சம் தொட்டது. இந்நிலையில் தற்போது மிஸ்டர் பீஸ்ட் யூடியூப் பக்கம் 30 கோடி சந்தாதாரர்களை அடைந்த முதல் யூடியூபர் என்ற வரலாற்றை படைத்துள்ளது.

இதற்காக மிஸ்டர் பீஸ்ட் பக்கத்தை பயனர்கள் பலரும் பாராட்டி பதிவிட்டு வருகின்றனர்.

## 22 சக்கர கனரக லாரியை ஓட்டி அசத்தும் பெண்




துபாய், ஜூலை 16

அரபு நாடுகளில் பெண்கள் வேலைக்கு செல்வது மிகவும் குறைவு என கூறப்படும் நிலையில் 22 சக்கர கனரக வாகனத்தை ஒரு பெண் ஓட்டி அசத்தியுள்ளார். துபாயை சேர்ந்தவர் பவுசியா சஹூரான். 22 வயதான இவர் பிறக்கும் போதே தந்தையை இழந்துள்ளார். தாயின் அரவணைப்பில் வாழ்ந்த இவர் துணிச்சல் மிகுந்த பெண்ணாக வளர்ந்தார். வணிக வரி துறையில் பட்டம் பெற்ற இவர் ஆணுக்கு நிகராக பெண்ணால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைத்து கனரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் பெற விண்ணப்பித்தார்.

துபாயில் கனரக வாகனத்திற்கான ஓட்டுனர் உரிமம் பெறுவது சுலபமல்ல. 2013ம் ஆண்டு முதல் முறையாக இலகு ரக வாகன லைசென்ஸ் பெற்ற இவர் 9 ஆண்டுகளுக்கு பிறகு கனரக வாகன உரிமம் பெற முயற்சி செய்தார். கண், உடல் பரிசோதனையின் போது அதிகாரிகள் இவரை வியப்புடன் பார்த்தனர்.

ஆனாலும் தனது விடா முயற்சியால் முதல் முயற்சியிலேயே கனரக வாகன ஓட்டுனர் தேர்வில் தேர்ச்சி பெற்றார். புஜாராவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் லாரி டிரைவராக சேர்ந்த இவர் 2 மற்றும் 3 அச்சுகள் கொண்ட 22 சக்கர கனரக வாகனத்தை ஓட்டி அசத்தி வருகிறார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், கனரக வாகனம் ஓட்டுவது சாதாரணமாக கார் ஓட்டுவது போன்று அல்ல. நீண்ட தூர பயணத்தில் முழு கவனம் மற்றும் பாதுகாப்புடன் இருப்பது மிகவும் அவசியம். அதே போல டீசல், தண்ணீர் மற்றும் டயரில் போதிய அளவு காற்று இருக்கிறதா என்பதையும் சோதனை செய்து கொள்ள வேண்டும் என்றார்.

# விஜய் வசந்த் எம்.பி தலைமையில் பிஎஸ்என்எல் தொலை தொடர்பு ஆலோசனை கூட்டம்

சென்னை, ஜூலை 16

பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது

திங்கள் நகரில் நடைபெற்ற பெருந்தலைவர் பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பெருந்தலைவருக்கு அஞ்சலி செலுத்தினேன்.



திங்கள் நகர் பேரூராட்சி தலைவர் திரு. சுமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் கே. டி.உதயம், சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் குமார், ரின்ஸ், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் லாரன்ஸ், யூசுஃப் கான், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் திரு டைசன் ,மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி திருமதி வதன நிஷா, மற்றும் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றதற்கு தெரிவித்த வாழ்த்தினை ஏற்று வாங்கினேன்.

பெருந்தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு ஏராளமான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது என்று கூறியுள்ளார்.

# புதிதாகஅங்கன்வாடி பள்ளி அல்லது மினி அங்கன்வாடி பள்ளி அமைத்து தர அமைச்சரிடம் முன்னாள் மாவட்ட செயலாளர் கோரிக்கை

ஆலங்குளம், ஜூலை 16

ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புதுப்பட்டி ஊராட்சி கரும்பு பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் வசித்து வருகிறார்கள் இங்கு 30 க்கும் மேற்பட்ட சிறு குழந்தைகள் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் சென்று புதுப்பட்டியில் இருக்கிற அங்கன்வாடி பள்ளியில் படித்து வருகிறார்கள்



இப்பகுதி மக்கள் அனைவரும் விவசாயக் கூலி தொழிலாளர்கள் அவர்கள் தனது குழந்தையை பள்ளிக்கு அழைத்துச் சென்று செல்வது பின்னர் மதியம் வீட்டு அளைத்து வருவது மிகவும் சிரமமாக இருக்கிறது என்று ஒன்றிய கவுன்சிலர் சண்முகராம் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில்புதுப்பட்டி பரும்பு பகுதியில் புதிதாக ஒரு அங்கன்வாடி பள்ளி அல்லதுமினி அங்கன்வாடி பள்ளி அமைத்து தர வேண்டும் என்கிற கோரிக்கையையும்

அதே போல ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி வெங்கடம் பட்டி ஊராட்சி சின்ன குமார் பட்டி பொதுமக்கள் மற்றும் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் ஆகியோர் கொடுத்த கோரிக்கை மனு அடிப்படையில் ....சின்ன குமார் பட்டி பகுதியில் சுமார் 125க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் இவர்களுடைய குழந்தைகளை இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்று வெங்கடம் பட்டியில் அங்கன்வாடி பள்ளிக்கு அழைத்துச் செல்ல வேண்டி உள்ளது விவசாய தொழிலாளர்கள் மிகுந்த இப்பகுதி மக்கள் குழந்தையை அழைத்து செல்வதும் பின்னர் வீட்டிற்கு அழைத்து வருவதும் மிகுந்த சிரமமாக இருப்பதால் இந்த ஊரில் சுமார் 25க்கும் மேற்பட்ட குழந்தைகள் வெங்கடாம்பட்டி அங்கன்வாடிக்கு சென்று வருகிறார்கள்இந்த ஊருக்கு தனியாக ஒரு அங்கன்வாடி அல்லது மினி அங்கன்வாடி அமைத்து ஒரு தர வேண்டும் என்கிற கோரிக்கை மனுவை அமைச்சர்அவர்களிடம் முன்னாள் மாவட்ட செயலாளர் சிவ பத்மநாபன் வழங்கினார்

நிகழ்ச்சியின் போது மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் சாமிதுரை முன்னாள் கடையநல்லூர் ஒன்றிய கழக செயலாளர் காசி தர்மம்துரை மாவட்ட பிரதிநிதி ஸ்டீபன் சத்யராஜ் மாவட்ட விவசாய தொழிலாளர் துணை அமைப்பாளர் ஆம்பூர் கருணாநிதி கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

# வெங்கட கிருஷ்ணாபுரத்தில் எழுந்தருளியுள்ள சீனிவாச பெருமாள், ஸ்ரீ மதுரை வீர சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக விழா

அரியலூர், ஜூலை 16

அரியலூர் வட்டம் வெங்கட கிருஷ்ணாபுரம் (எ)பெருமாள்சாவடி கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து கொண்டு இருக்கும் ஸ்ரீ தேவி, பூதேவி சமேத சீனிவாச பெருமாள், அக்னி அம்மன் வெள்ளையம்மாள், பொன்னியம்மாள் சமேத ஸ்ரீ மதுரை வீர சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக விழா நேற்று சிறப்பாக நடை பெற்றது. கடந்த ஆனி மாசம் 27 ஆம் தேதி விநாயகர் வழிபாட்டுடன் தொடங்கிய கும்பாபிஷேக விழாவில் யாக சாலை பூஜைகள் மற்றும் பூர்ணாஹிதி தீபாராதனை உள்ளிட்ட நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றது.



கும்பாபிஷேக விழாவான நேற்று கடம் புறப்பாடு தொடங்கியவுடன், சிவஸ்ரீ எஸ் அசோக் ஜி தலைமையிலான வேத விற்பனர்கள் வேத மந்திரங்கள் ஓத, புனித கும்ப நீர் மங்கள வாத்தியங்கள் முழங்கிட ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சீனிவாச பெருமாள், ஸ்ரீ மதுரை வீர சுவாமி மற்றும் பரிவார தெய்வங்கள் வீற்றிருக்கும் விமான கோபுர கலசங்கள் மீதும் ஊற்றப்பட்டு கும்பாபிஷேக விழா சிறப்பாக நடந்தது. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய பூஜாரியும் நிர்வாகிகளுமான எஸ் ராமசாமி மற்றும் கிராம முக்கியஸ் தர்கள் சிறப்பாக செய்திருந்தனர். கும்பாபிஷேக விழாவை காண சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

# அலங்காநல்லூர் ஒன்றிய பகுதியில் நாம் தமிழர் கட்சியின் சார்பாக உறுப்பினர் சேர்க்கை முகாம்

அலங்காநல்லூர் ஜூலை.16

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நாம் தமிழர் கட்சியின் சார்பாக உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் சோழவந்தான் தொகுதி தலைவர் சங்கிலிமுருகன், தொகுதி செயலாளர் சக்கரபாணி, தொகுதி பொருளாளர் சதீஷ், ஆகியோர் கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கை முகாமை தொடங்கி வைத்து புதிதாக கட்சியில் இணைந்தவர்களுக்கு உறுப்பினர் அட்டையை வழங்கினர்.



அதனைத் தொடர்ந்து அய்யூர் ஊராட்சியில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது பின்னர் அரசு பள்ளியில் பயின்று வரும் மாணவ மாணவியருக்கு திருக்குறள் புத்தகம் மற்றும் கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டது. பாலமேட்டில் நாம் நாம் தமிழர் கட்சியின் புதுப்பிக்கப்பட்ட கொடிக்கம்பத்தில் புதிய கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் மூக்குச்சாமி, ஒன்றிய தலைவர் திருப்பதி, ஒன்றிய செயலாளர் கண்ணதாசன், தகவல் தொழில்நுட்ப அணி கார்த்திக், அய்யூர் நிர்வாகிகள் ஆறுமுகம், கண்ணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அரசு நிதி உதவி பெறும் துவக்க பள்ளிகளுக்கு விரிவு படுத்தும் முன்னேற்பாடு பணிகள்: மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

கரூர், ஜூலை 16

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நெரூர் வடபாகத்தில் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் அரசு நிதி உதவி பெறும் துவக்க பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை விரிவு படுத்தும் முன்னேற்பாடு பணிகள் மற்றும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெறும் இடத்தில் நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.



இதுகுறித்து மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் என்ற சிறப்பு திட்டத்தை அரசு துவக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்காக செயல் படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து வருகின்ற 15.07.2024 அன்று அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தி துவங்கி வைக்க உள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதையொட்டி துவக்க விழா நடைபெற உள்ள நெரூர் புனித மரியன்னை அரசு உதவி பெறும் தொடக்க பள்ளியில் முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, வருகின்ற 16.07.2024 மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெறும் நெரூர் அருண் மஹாலில் முன்னேற்பாடு பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஸ்ரீ லேகா தமிழ்செல்வன், மகளிர் திட்ட இயக்குனர் சீனிவாசன், ஊராட்சிகளின் உதவி இயக்குனர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) தேன்மொழி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# திமுக வெற்றியை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞர்அணி மத்திகிரியில் வெற்றி கொண்டாட்டம்

கிருஷ்ணகிரிஜூலை,16

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வெற்றி விழாவை ஓசூர் மாநகர மத்திகிரியில் திமுக கழக வெற்றி விழாவை கொண்டாடிய கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர் த சுமன் தலைமையில் பட்டாசு உடைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி திமுக கழக வெற்றியை கொண்டாடப்பட்டது,



இந்த நிகழ்வில் மாநகர துணை செயலாளர் ரவிக்குமார் மாவட்ட இளைஞர் அணி மாநகர இளைஞர்அணி துணை அமைப்பாளர் சீனிவாசன் மற்றும் 45 வது வார்டு கிளைச் செயலாளர் சம்பத் மற்றும் மத்திகிரிக்கு உட்பட்ட திமுக கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சின்னசேலம் அருகே தனியார் பள்ளி பேருந்து கவிழ்ந்து விபத்து. 10 மாணவ மாணவிகள் படுகாயம்: கலெக்டர் நேரில் சந்தித்து ஆறுதல்

கள்ளக்குறிச்சி, ஜூலை. 16

கள்ளக்குறிச்சி மாவட்டம் வி.கூட்ரோடு அருகே உள்ளது வெல்டன் மெட்ரிக் பள்ளி. இந்த பள்ளியில் சனிக்கிழமை அன்று 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாலையில் வகுப்பு நேரம் முடிந்து பள்ளி பேருந்தில் மாணவர்களை ஏற்றிக்கொண்டு மணிகண்டன் என்கின்ற தற்காலிக ஓட்டுநர் குரால் கிராமப்பகுதியிலிருந்து சின்னசேலம் நோக்கி அதிவேகமாக வந்தபோது வளைவில் தடுப்பு கட்டைகளை உடைத்து கொண்டு விபத்துக்குள்ளானது. இதில் 30 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயணித்த நிலையில் 11 மாணவர்கள் படுகாயமடைந்தனர். பலத்த காயமடைந்த மாணவர்கள் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். காயமடைந்த மாணவர்களை மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் மருத்துவமனைக்கு சென்று பார்வையிட்டார். மேலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இரண்டு மாணவர்கள் மேல் சிகிச்சைக்காக கோவை தனியார் மருத்துவமனைக்கும், சேலம் மருத்துவமனைக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர். அப்பள்ளி தாளாளர் செந்தில்குமாரிடம்







கீழ்குப்பம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவமறிந்து கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் மருத்துவமனைக்கு சென்று காயமடைந்த மாணவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் தீவிர சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு உள்ள மாணவர்களை சந்தித்து ஆறுதல் கூறியதோடு , மருத்துவர்களிடம் நல்ல தரமான உயர்தர சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவருடன் கள்ளக்குறிச்சி ஒன்றிய குழு தலைவர் , அலமேலு ஆறுமுகம் , சின்னசேலம் ஒன்றிய குழுதுணை தலைவர் அன்புமணிமாறன், வடக்கு ஒன்றிய செயலாளர் அரவிந்தன் உடனிருந்தனர்.




திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டத்திற்கு உட்பட்ட கள்ளிமந்தையம் கிராமத்தில் உள்ள அரசு உதவி பெறும் சி.எஸ்.ஐ பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அரா.சக்கரபாணி துவக்கி வைத்தார். இதில் தமிழ் மாநில ஊரக வாழ்வாதார மகளிர் திட்ட இயக்குனர் நா. சரவணன், திண்டுக்கல் மாவட்ட கல்வி இயக்குனர் சண்முகவேல், பழனி கோட்டாட்சியர் சரவணன், நேர்முக உதவியாளர் முத்துச்சாமி, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் சசி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தாகிரா ,வேதா, தொப்பம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் சத்தியபுவனா, துணை பெருந்தலைவர் தங்கம் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

# குற்றாலத்தில் திடீர் வெள்ள பெருக்கு: சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

தென்காசி, ஜூலை 16

குற்றால அருவிகளில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை அடுத்து அனைத்து அருவிகளிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவதை அடுத்து சுற்றுலா பயணிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக மிதமான மழை முதல் கனமழை வரை பெய்து வருவதை அடுத்து குற்றாலத்தில் உள்ள அனைத்து அருவிகளிலும் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் நல்ல மழை பெய்ததை அடுத்து அதிக அளவு தண்ணீர் வருவதாகவும், இதனால் குற்றாலத்தில் உள்ள மெயின் அருவி, பழைய குற்றாலம், ஐந்தருவி உட்பட அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அருவிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதை அடுத்து பாதுகாப்பை முன்னிட்டு சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அருவியில் தண்ணீர் குறைந்த பிறகு மீண்டும் குளிக்க அனுமதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குற்றாலத்தில் தண்ணீர் நன்றாக வருகிறது என்ற கேள்விப்பட்டு வந்த சுற்றுலா பயணிகளுக்கு இந்த அறிவிப்பு ஏமாற்றத்தை அளித்துள்ளது. இருப்பினும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சுற்றுலா பயணிகள் பாராட்டு வருகின்றனர்.

# பழவேற்காடு அரசு பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் 1500 பேர் சந்திப்பு நிகழ்ச்சி





திருவள்ளூர் ஜீலை 16

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காட்டில் இயங்கி வரும் ஜெகதாம்பாள் சுப்பிரமணியம் அரசு மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா நடைபெற்றது. சுமார் 1500 முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் 19 70 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பயின்ற முன்னாள் மாணவர்கள் ஒன்று சேர்ந்துஇந்தநிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகள் கடந்த ஆறு மாத காலமாக அலுமனி குழு துவக்கப்பட்டு அதற்கான நிர்வாகிகள் மூலம் நடைபெற்று வந்தது.

நேற்று நடைபெற்ற ஆண்டு விழாவில் பள்ளி மாணவர்களின் சிலம்பாட்ட நிகழ்ச்சிகளுடன் 60 ஆண்டுகால மூத்த ஆசிரியர்களை முன்னாள் மாணவர்கள் வரவேற்று கௌரவித்தனர். 1968 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு பயின்ற 75 வயது இரண்டு முன்னாள் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் முன்னாள் ஆசிரியர்கள், 60 ஆண்டுகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் முதல் மதிப்பெண் எடுத்த முன்னாள் மாணவ, மாணவிகளுக்கும், பழவேற்காடு பகுதியில் உள்ள 32 கிராம நிர்வாகிகளுக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. இதனை பள்ளிக் கல்வி துறை இயக்குனர் ஓய்வு பெற்ற அறிவொளி வழங்கினார்.

கல்வி துறையின் உயர் அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் எந்த ஒரு அரசியல் கலப்பும் இல்லாமல் முழுக்க முழுக்க பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்களே நிகழ்ச்சியை நடத்தினர். ஒவ்வொரு ஆண்டு பள்ளி படிப்பை முடித்த முன்னாள் மாணவர்கள் தங்கள் நண்பர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். தாங்கள் அமர்ந்து படித்த இருக்கைகளில்அமர்ந்து நினைவை பகிர்ந்து கொண்டனர். முன்னதாக முன்னாள் மாணவர் குழு சார்பில் நன்கொடையாளர்கள் கல்வெட்டு திறப்பு, பள்ளிக்கு நன்கொடை அளித்தல், பள்ளி சீரமைப்பு பணிகள் துவக்கம் உள்ளிட்ட சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பழவேற்காடு ஜெகதாம்பாள் சுப்பிரமணியம் அரசு மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள் சங்க தலைவர் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# திராவிட கழக மாவட்ட தலைவர் ச. மணிவண்ணன் தலைமையில் "நீட்"டை ஒழிப்போம், சமூகநீதி காப்போம்: இருசக்கர வாகன பேரணி பரப்புரையினருக்கு சிறப்பான வரவேற்பு




துறையூர் ஜீலை16

திருச்சி மாவட்டம் துறையூர் பேருந்து நிலையம் அண்ணா சிலை முன்புறம் (ஜீலை14) துறையூர் மாவட்ட திராவிட கழக சார்பில், கன்னியாகுமரி முதல் சேலம் வரை "நீட்டை ஒழிப்போம்! சமூக நீதி காப்போம்! இருசக்கர வாகன பரப்புரை பயணம் மேற்கொண்டு துறையூர் நகருக்கு வருகை தந்த திராவிடர் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி முதல் குழுவினரை மாவட்ட தலைவர் ஆசிரியர் ச.மணிவண்ணன் தலைமையில் வரவேற்று சிறப்புரை ஆற்றினார். இதில் மாவட்ட துணை தலைவர் மா.இரத்தினம், மாவட்ட இளைஞர் அணி தலைவர் ச.முகாமுனி ஆகியோர் முன்னிலை வகிக்க, ப.க.மாவட்ட தலைவர் ஆ.சண்முகம் வரவேற்று உரையாற்றினார். இந்நிகழ்வில் மாணவர் கழக மாநில செயலாளர் இரா. செந்தூரபாண்டியன், மாநிலத் துணைச் செயலாளர் ச.சு. இனியன், மாநிலஅமைப்பாளர் மு.இளமாறன் ஆகியோர் பரப்புரை ஆற்றினார்கள். நிகழ்வில் "நீட்டை ஒழிப்போம் சமூக நீதி காப்போம்" என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தி நீட் நம் தமிழ்நாட்டிற்கு தேவையில்லை இதனால் மாணவர்களின் கனவு நினைவாகாமல் உயர்கல்வி படிப்பு பாதிக்கப்படுகிறது என்று மாவட்ட தலைவர் ச. மணிவண்ணன் பேசினார். இதில் மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் செந்தில்குமார், மாவட்ட இளைஞர், அணி அமைப்பாளர் ரஞ்சித்குமார்மாவட்ட மாணவரணி தலைவர் தன்ராஜ், மாவட்ட மாணவரணி செயலாளர் விஷ்ணுவர்தன், துறையூர் ஒன்றிய தலைவர் ராவரதராஜன், ஒன்றிய செயலாளர் பாரதி, மாவட்ட இளைஞரணி செயலாளர் தன்ராஜ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கேகாவியா, மாவட்ட செயலாளர் பிரபு, மாவட்ட அமைப்பாளர் தினேஷ், மாவட்ட நகர தலைவர் ராஜா, நகர செயலாளர் இளையராஜா, உப்பிலியபுரம் ஒன்றிய தலைவர் எம் ஏ ரமேஷ் ,ஒன்றிய செயலாளர் சத்தியசீலன், துறையூர் நகர மாணவரணி செயலாளர் அர்ஜூன், நகர அமைப்பாளர் க. பாலகிருஷ்ணன், ஒன்றிய மாணவனை அமைப்பாளர் குணாள், பெரியார் கண்ணன், கோர்ட்டு பெ. பாலகிருஷ்ணன், நாராயணன், கருப்பையா, இனியன் சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திராவிட கழக மாவட்ட செயலாளர் ஜெ. தினேஷ் பாபு நன்றி கூறி வழி அனுப்பினார்.

# காட்பாடியில் மகளை பார்க்க சென்ற கணவன் மனைவி லாரி மோதி சம்பவ இடத்திலேயே பலி



வேலூர் ஜீலை:16

வேலூர் கஸ்பா வசந்தபுரம் அடுத்த செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த தேவதானம் மகன் சுரேஷ் குமார் வயது 55 அவர் வேலூர் தனியார் (CMC) மருத்துவமனையில் ஊழியராக பணியாற்றி இவரது மனைவி எலிசபெத் ராணி இந்த தம்பதியருக்கு திருமணம் ஆகி 3 பெண் பிள்ளைகள் உள்ளன தனது மனைவியை அழைத்துக்கொண்டு அவரது மகள் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் குடிப்பாலா பகுதியில் உள்ளதனியார் (CMC) கல்லூரியில் நர்சிங் படிப்பு படித்து வருகிறார் அவரை பார்க்க வேலூரில் காட்பாடி நோக்கி கிருஷ்டியான்பேட்டை பகுதியில் செல்லும் போது பின்னால் வந்த லாரி மோதியதில் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் லாரி சக்கரத்தில் சிக்கி சம்பவ இடத்திலே கணவன் மனைவி உயிரிழந்துள்ளனர் இது குறித்து காட்பாடி காவல் உதவி ஆய்வாளர் மணிகண்டன், பயிற்சி உதவி ஆய்வாளர் பரத், மற்றும் காவலர் வினோத், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பலியான இருவரையும் உடற்கூர்வு ஆய்விற்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துமணைக்கு அனுப்பிவைத்து இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# AIYF தேனி மாவட்டம் சின்னமனூர் ஒன்றிய மாநாடு




தேனி, ஜூலை 16

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சின்னமனூர் ஒன்றிய மாநாடு 14.7.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 06.00 மணியளவில் வே.ஜெய்ஹிந்த் தலைமையில் கத்தோலிக்க திருச்சபை மண்டபத்தில் நடைபெற்றது. அஞ்சலி தீர்மானத்தை தோழர் தி.மணிவேல் அவர்கள் வாசித்தார். அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மாவட்டக் குழு உறுப்பினர் தோழர் R.மகேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் ஒன்றிய செயலாளர் தோழர் நா.பவுன்ராஜா, தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்டக்குழு உறுப்பினர் தோழர் மணவாளன் ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி பேசினார்கள். மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஒன்றிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி AIYF மாவட்ட செயலாளர் இரா.தமிழ் பெருமாள் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

11 பேர் கொண்ட ஒன்றியக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒன்றிய தலைவராக தோழர் M.விக்கி அவர்களும், ஒன்றியச் செயலாளராக வே.ஜெய்ஹிந்த் அவர்களும், ஒன்றிய துணைச் செயலாளராக செ.கார்த்திக்ராஜா அவர்களும், ஒன்றிய துணைத்தலைவராக பிரேம்குமார் அவர்களும் ஒன்றிய பொருளாளராக M.நித்தியானநாதம் அவர்களும், S.சதீஸ்குமார், மு. வேல்முருகன், NS.விக்கி ஆகியோர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகவும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிறப்பாக பேரவையில் இளைஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மக்கள் நலன் சார்ந்த முக்கியமான தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்ற ப்பட்டது.தீர்மானங்கள்.

நிர்வாக வசதிக்காக சின்னமனூரை தலைமையிடமாகக் கொண்டு தனித்தாலுகா ஏற்படுத்த தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கம்பம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்னமனூர் ஒன்றிய பகுதி மற்றும் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் இரு பாலரும் பயன்பெறும் வகையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். சின்னமனூர் நாகராட்சி எல்லைக்குட்பட்ட திண்டுக்கல் குமுளி தேசிய நெடுஞ்சாலையில் எள்ளுக்கட்டைச் சாலையில் அமைந்திருந்த கடை எண் 8547 என்ற அரசு டாஸ்மாக் கடையை பக்தர்கள், வியாபாரிகள், விவசாயிகள் நலன் கருதி அரசு அகற்றிய நிலையில், மீண்டும் அதே இடத்தில் FL2 முல்லைத் தென்றல் மனமகிழ் மன்றம் என்கிறதனியார் மதுபான கடைக்கு பொது மக்களின் எதிர்ப்பையும் மீறி மாவட்ட நிர்வாகம் கொடுத்த அனுமதி திரும்ப பெற வேண்டும். சின்னமனூர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் DSP அலுவலகம் ஏற்படுத்திட தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்இளம் பெண்கள், பெண்கள் மற்றும் குடும்ப பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்கொடுமைகளைத் தடுப்பதற்கு புதிய அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். நகர் பெருக்கம், ஊர் பெருக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கு புதிய போக்குவரத்து காவல் நிலையம் ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சின்னமனூர் நகர் காவல் நிலையம் மிகப்பெரிய சுற்று வட்டாரத்தையும், பல்வேறு கிராமங்களையும் உள்ளடக்கி உள்ளதால் காவல்துறையால் மிகவும் சிரமத்திற்கும், மன உளைச்சலுக்கும் உள்ளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை தவிர்ப்பதற்கு சின்னமனூர் நகருக்கு நகர் காவல் நிலையமும், ஊரகப் பகுதிகளுக்கு ஊரக காவல் நிலையமும் ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். நகர, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மக்களின் அடிப்படை பிரச்சனைகளான சாக்கடை, குடிநீர், தெருவிளக்கு, சாலை வசதி போன்றவற்றை போர்க்கால அடிப்படையில் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்ட முக்கிய தீர்மானங்கள் மாநாட்டில் ஏகமனதாக நிறைவே ற்றப்பட்டது.

# அரியலூர் மாவட்டத்தில் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்கத்தினை போக்குவரத்துத் துறை துவக்கி வைத்தார்



அரியலூர், ஜூலை:16

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட குமிழியம் மங்கையர்கரசி அரசு உதவிப்பெறும் நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஊரகப் பகுதிகளில் அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திங்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர்ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவியரின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களை தொடர்ந்;து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு நகர்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கபப்பள்ளிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம தொடங்கி வைக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை ஊரக பகுதிகளில் அரசு உதவிப் பெறும் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் நேற்றைய தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார். இதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட குமிழியம் மங்கையர்கரசி அரசு உதவிப்பெறும் நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் நேற்றையதினம் தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் அமர்ந்து உணவு சாப்பிட்டார். அதன்படி அரியலூர் மாவட்டத்தில் உள்ள 37 அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் பயிலும் 3063 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகின்றனர். மேலும் அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சிகுட்பட்ட 12 அரசு தொடக்கப்பள்ளிகள்,

பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் உள்ள 477 அரசு தொடக்கப்பள்ளிகள் என மொத்தம் 489 தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 27,232 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட விரிவாக்கத்தில் தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டியாக திங்கள் கிழமை ரவா உப்புமா மற்றும் காய்கறி சாம்பார், செவ்வாய் கிழமை கோதுமை ரவா மற்றும் காய்கறி கிச்சடி, புதன் கிழமை வெண்பொங்கல் மற்றும் காய்கறி சாம்பார் வியாழக்கிழமை அரிசி உப்புமா மற்றும் காய்கறி சாம்பார், வெள்ளிக்கிழமை சேமியா காய்கறி கிச்சடி மற்றும் ரவா கேசரி ஆகிய உணவுகள் வழங்கப்படும். அரசு அனுமதித்த பிற சிற்றுண்டி உணவுகளும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கிடைக்ககூடிய காலை உணவினால் கவனக்குறைவின்றி நன்றாக படிப்பதுடன் வேலைக்கு செல்லும் பெற்றோர்களின் குழந்தைகள் இத்திட்டத்தால் மிகுந்த பயன்பெறுவார்கள் எனவே, இதனை பள்ளி மாணவ, மாணவியர் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

முன்னதாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122 ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு போக்குவரத்துத் துறை அமைச்சர் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரிணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) சாமி முத்தழகன், மாவட்ட நிலை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள்மற்றும்பள்ளிமாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவிலில் நடைபெற்ற மாவட்ட அளவிலான செஸ்




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தி பயோனியர் பள்ளி மற்றும் கேப் செஸ் அகாடமியும் இணைந்து (13/07/24) சனிக்கிழமை அன்று பள்ளி வளாகத்தில் வைத்து மிகப் பிரமாண்டமாக மாவட்ட அளவிலான செஸ் போட்டியானது நடைபெற்றது. காலை நடைபெற்ற இந்த தொடக்கவிழாவில் பள்ளியின் தாளாளர் லதா குமாரசாமி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

அப்பள்ளியின் நிர்வாகிகள் மற்றும் கேப் செஸ் அகாடமி ஒருங்கிணைப்பாளர்கள்கலந்துகொண்டு சிறப்பித்ததோடு மட்டுமின்றி போட்டியில் பங்கு பெற்ற மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்தினார்.

இப்போட்டியானது மாணவ மாணவியர் வயது 7, 9, 11, 13 ,15 குள் உட்பட்ட மற்றும் பொது பிரிவினர் என பல பிரிவுகளாக நடைபெற்றது. எல்லா வகை பிரிவுகளுக்குமான மொத்தம் 600 க்கு மேற்பட்ட மாணவிய மாணவியர் பங்கேற்றனர். இது விதிமுறைகளின் படி ஏழு சுற்றுகளாக நடத்தப்பட்டது. அதில் அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி ஆளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மொத்தமாக ஒவ்வொரு பிரிவிற்கும் 10 பரிசுகள் என அனைத்து பிரிவுகள் 100 பரிசு கோப்பைகள் மற்றும் வெற்றி பெற்ற பொது பிரிவினர் 10 ரொக்க பரிசுகளும் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன. மேலும் அதிக மாணவ மாணவிகளை கலந்து கொள்ள செய்த தி பயோனியர் பள்ளிக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. வெற்றி பெற்ற சாதனையாளர்களுக்கு பள்ளித் தாளாளர் லதா குமாரசாமி மற்றும் குமரி மாவட்ட செஸ் அசோசியேஷன் செயலாளர் டாக்டர் வின்ஸ்டன் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள்.


இந்நிகழ்வினை பள்ளி முதல்வர் பிரகாஷ் குமார் பள்ளி நிர்வாகிகள் கேப் செஸ் அகாடமி ஒருங்கிணைப்பாளர்சிவா ஒருங்கிணைந்து விழாவினை மிக சிறப்புற நடத்தினர். இந்நிகழ்ச்சியில் மாணவ மாணவிகள் பெற்றோர்களுடன் வந்து இறுதிவரை பொறுமையுடன் இருந்த இவர்களை தி பயோனியர் பள்ளி மற்றும் கேப் செஸ் அகாடமி நிர்வாகிகள் பாராட்டினார்கள்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

16.7.2024

# யோகி பாபு நடிக்கும் `போட்' திரைப்படத்தின் முதல் பாடல் வெளியானது



வடிவேலு நடிப்பில் 2006 ஆம் ஆண்டு இம்சை அரசன் 23 ஆம் புலிக்கேசி திரைப்படத்தை இயக்கி தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமாகினார். அதைத் தொடர்ந்து பல வெற்றி படங்களை இயக்கினார்.

கடைசியாக 2021 ஆம் ஆண்டு வெளிவந்த கசடதபற திரைப் படத்தை இயக்கினார். அதைத் தொடர்ந்து யோகி பாபு நடிப் பில் உண்மை சம்பவத்தின் அடிப்படையில் போட் என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

இக்கதை சூழல் 80 வருடங்களுக்கு முன் இந்திய சுதந்திரம் வாங்குவதற்கு முன் நடக்கும் கதையாக அமைந்து இருக்கி றது. ஜப்பான் நாடு, மெட்ராஸ் ப்ரெசிடன்சியாக மீது குண்டு வீசிய போது அங்கு இருந்து 10 நபர்கள் பே ஆஃப் பெங்கால் கடற்கரையில் உயிர் தப்பிக்க பதுங்குகிறார்கள்.

இப்படத்தில் போட் மேனாக யோகி பாபு முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இவருடன் எம்.எஸ் பாஸ் கர், கௌரி கிஷன், சின்னி ஜெயந்த், மதுமிதா ஆகியோர் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். இப்படத்தை மாலி மற்றும் மான்வி மூவி மேக்கர்ஸ் மற்றும் சிம் புதேவன் எண்டர்டெயின்மண்ட் ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர். படத்தின் டிரைலர் தற்பொழுது வெளி யாகியுள்ளது. திரைப்படம் வரும் ஆகஸ்ட் 2 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

படத்தின் முதல் பாடலான `சோக்கா நானும் நிக்கிறேன்' என்ற பாடலின் லிரிக்கல் வீடியோவை வெளியிட்டுள் ளனர். இப்பாடலின் வரிகளை கோல்ட் தேவராஜ் எழுதியுள்ளார். பத்ம பூஷன் விருது பெற்ற சுதா ரகுநாத் இப்பா டலை பாடியுள்ளார்.

# "ஒன்றா இரண்டா ஆசைகள்.... எல்லாம் சொல்லவே ஓர்நாள் போதுமா" ஜோதிகாவின் வைரல் பதிவு



மும்பையில் பிறந்து வளர்ந்து, ஹிந்தி மொழி திரைப்படங்கள் மூலம் அறிமுகமாகியிருந்தாலும், இன்று கோலிவுட் உலகில் முன்னணி நட்சத் திரமாக விளங்கி வருபவர் ஜோதிகா. இவர் கடந்த 2006ம் ஆண்டு பிரபல நடிகர் சூர்யாவை, காத லித்து திருமணம் செய்து கொண்டார். இந்த ஜோடிக்கு இப்போது இரண்டு குழந்தைகள் உள் ளனர்.

கடந்த சில வருடங்களாகவே தனது கணவரின் தயாரிப்பில்தொடர்ச்சியாகபலதிரைப்படங்களில் நடித்து வருகிறார். பல ஆண்டுகள் கழித்து தற்பொ ழுது பாலிவுட் உலகிலும் ரீ என்ட்ரி கொடுத்திருக் கிறார். சமீபத்தில் ஷைத்தான் மற்றும் ஸ்ரீகாந்த் ஆகிய இந்திப்படங்களில் நடித்தார்.

இந்நிலையில் இந்தியாவின் பெரும் பணக்காரர் முகேஷ் அம்பானியின் இளைய மகன் அனந்த அம் பானி மற்றும் ராதிகா ஆகியோரின் திருமணத்தில், சூர்யா மற்றும் ஜோதிகா ஆகிய இருவரும் தம்பதிகளாக கலந் துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

இந்த திருமண விழாவிற்கு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், ஷாருக்கான், சல்மான் கான், இயக்குனர் அட்லி, விக்னேஷ் சிவன், நயன்தாரா என்று இந்திய திரை உலகின் பெரும் நட்சத்திரங்கள் நேரில் பங்கேற்ற நிலையில், வெளிநாடுக ளில் இருந்தும் பல துறையை சேர்ந்த பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

மேலும் இந்த விழாவில் பங்கேற்ற நடிகை ஜோதிகா, 18 ஆண்டுகளுக்கு முன்பு திருமணத்தின்போது தனது கண வர் சூர்யா அணிவித்த, இரண்டு அடுக்கு வைர மோதிரத்தை, அவர்கள் அன்பின் அடையாளமாக இந்த திருமணத் திலும் அணிந்து வந்திருந்தது வெகுவாக பலரது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

அந்த விழாவின் போது சூர்யாவுடன் எடுக்கப்பட்ட புகைப்படத்தை அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட் டுள்ளார். அப்புகைப்படம் தற்பொழுது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

சூர்யா பட்டு வேட்டி சட்டையிலும் , ஜோதிகா பிங்க் நிற புடவையிலும் சூர்யாவுடன் இணைந்து மிகவும் அழ காக போஸ் கொடுத்துள்ளார். இன்ஸ்டாகிராமில் பதிவிட்ட பதிவி"ஒன்றாய் இரண்டா ஆசைகள் எல்லாம் சொல் லவே ஒருநாள் போதுமா" சில்லுனு ஒரு காதல் திரைப்படத்தின் பாடல் வரிகளை எழுதி பதிவிட்டுள்ளார்.

# `ராயன்' படத்தின் டிரைலர் அப்டேட்






நடிகர் தனுஷ் தனது 50 வது படத்தை அவரே இயக்கி நடித்துள்ளார். இப்படத்துக்கு 'ராயன்' என பெயரிடப்பட் டுள்ளது. சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்துக்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ளார்.


இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா, செல்வராகவன், பிர காஷ்ராஜ், காளிதாஸ் ஜெயராம், சுதீப் கிசன், துஷாரா விஜ யன் என நட்சத்திர பட்டாளத்தையே களமிறக்கியுள்ளார் தனுஷ். இப்படத்தின் அடுத்தடுத்த போஸ்டர்கள் வெளி யாகி ரசிகர்களிடையே படத்தின் மீதான எதிர்பார்ப்பை எகிறச் செய்துள்ளது.

படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைப் பெற்றது. படத்தின் பாடல்களுக்கு நல்ல வரவேற்பு ரசிகர்கள் மத்தியில் கிடைத்துள்ளது.

இந்நிலையில், கேங்ஸ்டர் கதைக்களத்தில் உருவாகி உள்ள இப்படம் ஜூலை மாதம் 26ந்தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. படத்திற்கு தணிக்கை குழு A சான்றிதழை அளித்துள்ளனர். இதனால் ரசிகர்கள் மத்தியில் இன் னும் அதிகமான எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

படத்தின் டிரைலர் குறித்து தற்பொழுது அப்டேட் வெளியாகியுள்ளது. படத்தின் டிரைலர் வரும் ஜூலை 16 ஆம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

# "Iam coming for you" ஆபரேஷன் ராஹத் டீசர்...




தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களுள் ஒருவர் சரத்குமார். இதுவரை நூற் றிருக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தார், கடந்த ஆண்டு வெளியான பொன் னியின் செல்வன், போர் தொழில், பரம் பொருள் ஆகிய திரைப்படத்தின் மூலம் சரத் குமாருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அடுத்தடுது போலீஸ் கதாப்பாத்தி ரத்தில் கமிட் ஆகி நடித்து வருகிறார். கடந்த மாதம் வெளியான ஹிட் லிஸ்ட் திரைப்படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தார். இந்நிலையில் சமீபத்தில் சரத்குமாரின் மகள் வரலட்சுமிக்கும், நிக்கோலாய் சச்தேவ் பிரம்மாண் டமாக திருமணம் நடத்து முடிந்தது. கடந்த ஜூலை 3ம் தேதி சென்னையில் உள்ள லீலா பேலஸில் பிரம்மாண்டமாக நடைபெற்ற திருமண வரவேற்பு விழா நிகழ்ச் சியில் ஒட்டுமொத்த தென்னிந்திய திரையுலக பிரபலங்கள் பலர் பங்கேற்று மண மக்களை வாழ்த்தினர். இந்நிலையில் மேஜர் ரவி இயக்கத்தில் சரத் குமார் முக்கிய வேடத்தில் நடித்துள்ள படம் "ஆபரேஷன் ராஹத்". கே கிருஷ்ணகுமார் எழுதிய, இந்த பான்இந்திய திரைப்படத்தை பிரசிடென்ஷியல் மூவிஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் தயாரித்துள்ளது. தயாரிப்பு குழுவில் மேஜர் ரவியின் மகன் அர்ஜுன் ரவி ஒளிப்பதிவாளராகவும், ரஞ்சின் ராஜ் இசையமைப்பாளராகவும், டான் மேக்ஸ் எடிட்டராகவும் உள்ளனர். இந்நிலையல் படத்தின் டீசர் வெளி யாகி உள்ளது. டீசர் சமூகவலை தளங்களில் வைரலாகி வருகிறது. இது குறித்து நடிகர் சரத்குமார் தனது எக்ஸ் தளபதிவில் கூறியிருப்பதாவது,

# `ஜமா' படத்தின் டீசர் வெளியானது




தமிழ்நாட்டில் உள்ள தெருக்கூத்து கலைஞர்களின் வாழ்க்கைமுறை மற்றும் சவால்களை மையமாக வைத்து 'ஜமா' என்ற படத்தை இளவழகன் இயக்கி முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

இப்படத்தை கூழாங்கல் திரைப்படத்தை தயாரித்த நிறுவனமான லேர்ன் அண்ட் டீச் புரொடக்சன்ஸ் படத்தை தயாரித்துள்ளது.

'ஜமா' என்பது தெருக்கூத்து நாடகக் கலைஞர்களின் குழுவைக் குறிக் கிறது. இந்தக் கதை தெருக்கூத்து கலைஞர்களின் அனுபவங்களை மையமாகக் கொண்டு திருவண்ணாமலையில் படமாக்கப்பட்டுள் ளது. படத்தின் டீசர் தற்பொழுது வெளியாகியுள்ளது. மிகவும் ஜாலியாக ஆரம்பித்த டீசர் காட்சிகள் போகப் போக மிகவும் சீர்யசாக நகர்கிறது. நாடகத்தில் பெண் வேடம் அணியும் நபரின் வாழ்க்கையையும் நாடக கலைஞர்களை பற்றி பேசும் திரைப்படமாக அமைந்துள்ளது.

திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மற்றும் சில இடங்களில் தெருக்கூத்து கலாச்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது.

இளையராஜா இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். சேத்தன், அம்மு அபிராமி, ஸ்ரீ கிருஷ்ண தயாள், கே.வி.என். மணிமேகலை, காலா குமார், வசந்த் மாரிமுத்து, சிவா மாறன் உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர். திரைப்படம் வரும் ஆகஸ்ட் 2 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

# ஜிம்பாம்பேவை வீழ்த்தி 4- 1 என்ற கணக்கில் டி20 தொடரை இந்தியா கைப்பற்றியது



ஜிம்பாப்வே இந்திய அணிகளுக்கு இடையே 5 ஆவது டி20 போட்டி இன்று நடைபெற்றது. இப்போட்டியில் டாஸ் வென்ற ஜிம்பாப்வே அணி பந்துவீச்சை தேர்வு செய் தது.

இந்திய அணியில் ஒப்பனிங் பேட்ஸ்மேன்களாக களமி றங்கிய ஜெய்ஸ்வால் 12 ரன்னிலும் சுப்மன் கில் 13 ரன் னிலும் ஆட்டமிழந்தனர்.அடுத்ததாக களமிறங்கிய அபி ஷேக்சர்மா14ரன்னில்தனதுவிக்கெட்டைபறிகொடுத்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்த சாம்சன் ரியான் பராக் சிறப்பாக விளையாடினார். நிதானமாக விளையாடிய சாம்சன் 45 பந்துகளில் 58 ரன்கள் அடித்து அவுட்டானார்.

ரியான் பராக் 22 ரன்னிலும் சிவம் துபே 26 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இறுதியாக 6 விக்கெட் இழப்பிற்கு இந் திய அணி 167 ரன்கள் எடுத்தது.

இதனையடுத்து 168 ரன்கள் என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய ஜிம்பாப்வே அணி இந்திய அணியின் சிறப் பான பந்துவீச்சால் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. 18.3 ஓவர்கள் முடிவில் அனைத்து விக் கெட்டுகளையும் இழந்து 125 ரன்களுக்கு ஜிம்பாப்வே ஆட்டமிழந்தது.

இதன்மூலம் 42 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. ஜிம்பாப்வே அணியில் அதிகபட் சமாக டியான் மியர்ஸ் 34 ரன்கள் அடித்தார். இந்திய அணி தரப்பில் முகேஷ் குமார் 4 விக்கெட்டும் சிவம் துபே 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இந்த போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 4 1 என்ற கணக்கில் இந் திய அணி தொடரை கைப்பற்றியுள்ளது.

# மழையால் பந்துவீச்சாளர்கள் மிகவும் சிரமப்பட்டனர் தோல்வி குறித்து அருண் கார்த்திக் கருத்து



டி.என்.பி.எல். போட்டியில் நெல்லை அணியை வீழ்த்தி கோவை கிங்ஸ் ஹாட்ரிக் வெற்றியை பெற்றது. கோவையில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய நெல்லை ராயல் கிங்ஸ் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 167 ரன் எடுத்தது.

கேப்டன் அருண் கார்த்திக் 38 பந்தில் 47 ரன்னும் (பவுண்டரி, 2 சிக்சர்) சோனு யாதவ் 26 பந்தில் 43 ரன்னும் (1 பவுண்டரி, 5 சிக்சர்) எடுத்தனர். கேப்டன் ஷாருக்கான், எம்.முகமது தலா 2 விக்கெட் வீழ்த்தினார்கள்.

பின்னர் ஆடிய நடப்பு சாம்பியன் கோவை கிங்ஸ் 18.3 ஓவரில் 1 விக் கெட் இழப்புக்கு 172 ரன் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சச்சின் 48 பந்தில் 76 ரன்னும் (8 பவுண்டரி, 3 சிக்சர்), சுரேஷ் குமார் 55 பந்தில் 63 ரன்னும் (3 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தனர்.

வெற்றி குறித்து கோவை கிங்ஸ் கேப்டன் ஷாருக்கான் கூறியதாவது:

டி.என்.பி.எல். தொடரில் தொடர்ந்து 10வது வெற்றியை பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. முதல் 2 போட்டியில் கடுமையாக போராடி வென்றோம். இனி வரும் போட்டிகளிலும் எங்களின் முழு திறமையை வெளிப்படுத்தி மிகப் பெரிய வெற்றியை பெறுவோம். சொந்த ஊரான கோவையில் வெற்றி பெறுவது எப்போதுமே மகிழ்ச்சி அளிக்கி றது. இவ்வாறு அவர் கூறினார். நெல்லை ராயல்ஸ் கிங்ஸ் முதல் தோல்வியை தழுவியது. தோல்வி குறித்து அந்த அணி கேப்டன் அருண் கார்த்திக் கூறும்போது, 'மழை பெய்ததால் பந்து வீச்சாளர்கள் பந்து வீச மிகவும் சிரமப்பட்டனர்'. பேட்டிங்கில் எங்களது ஷாட்கள் தவறாக இருந்தது. கோவை அணி கேப்டன் ஷாருக்கான் பந்து வீச்சாளர்களை சரியாக பயன்படுத்தி எங்களை கட்டுப்படுத்தினார். இனி வரும் போட்டிகளில் சிறப்பாக ஆடுவோம் என்றார். நடைபெறும் 'லீக்' ஆட்டங்களில் சேலம் ஸ்பார்ட்டன்ஸ்திருச்சி கிராண்ட் சோழாஸ் (மாலை 3.15), சேப் பாக் சூப்பர் கில்லீஸ்திண்டுக்கல் டிரா கன்ஸ் (இரவு 7.15) அணிகள் மோதுகின்றன.

# நான்தான் ரோகித்தை கேப்டனாக நியமித்தேன் என்பதையே மறந்துவிட்டனர் கங்குலி ஆதங்கம்



9வது 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடந்தது. தொடரில் தோல்வியையே சந்திக்காமல் வீறுநடை போட்ட இந்திய அணி, கடந்த மாதம் 29ந்தேதி நடந்த பரபரப்பான இறுதி ஆட்டத்தில் 7 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவைத் தோற்கடித்து உலக கோப் பையை கைப்பற்றியது.

20 ஓவர் உலகக் கோப்பையை 17 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய அணி சொந்தமாக்கியதால் ஒட்டுமொத்த தேசமும் வெற்றியை உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந் தது. 2013 ஆண்டு நடைபெற்ற சாம்பியன்ஸ் டிராபி கோப்பைக்கு அடுத்து 11 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய அணி ஐசிசி கோப்பையை வென்றுள்ளது.

2019 ஆண்டு ஒருநாள் உலகக்கோப்பை தோல்விக்கு பிறகு விராட் கோலியிடம் இருந்து கேப்டன் பதவி பறிக்கப்பட்டு ரோகித் சர்மாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது பிசிசிஐ தலைவராக இருந்த சவுரவ் கங் குலி தான் ரோகித்திற்கு கேப்டன் பதவியை வழங்கி னார். அப்போது இந்த முடிவு கடுமையாக விமர்சிக்கப்பட்டது.



இந்நிலையில், ரோகித்தை கேப்டனாக்க முடிவு செய் தது குறித்து சவுரவ் கங்குலி பேசியுள்ளார்.


"இந்தியகேப்டனாகரோகித்சர்மாவைநியமித்தபோது எல்லோரும் என்னை விமர்சித்தனர். தற்போது ரோகித் தலைமையில் இந்திய அணி உலக கோப்பை வென்ற தும் அனைவரும் விமர்சிப்பதை நிறுத்திவிட்டனர். மேலும், நான்தான் ரோஹித்தை கேப்டனாக நியமித் தேன் என்பதையே அனைவரும் மறந்துவிட்டனர் என்று என்று சவுரவ் கங்குலி ஆதங்கத்துடன் தெரிவித் துள்ளார்.

# புற்று நோயால் பாதிக்கப்பட்ட அன்ஷுமானுக்கு 1 கோடி உதவி: ஜெய்ஷா அதிரடி உத்தரவு

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அனுஷ் மான் கெய்க்வாட் தற்சமயத்தில் உடல்நலம் பாதிக்கப் பட்டுள்ளார். இந்தியாவுக்காக அவர் 12 வருடங்களில் 40 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பெருமையை கொண்டவர். மேலும் 1990களின் இறுதியில் இந்திய அணியின் பயிற்சியாளராகவும் அவர் செயல்பட்டார்.

அவருடைய வழி காட்டுதலில் சார்ஜாவில் நடை பெற்ற கோகோகோலா கோப்பையை இந்தியா வென் றதை மறக்க முடியாது. அத்துடன் ஓய்வுக்கு பின் பிசிசிஐ நிர்வாகத்தில் அவர் முக்கிய பொறுப்பிலும் இருந்தார். தற்போது 71 வயதாகும் அவர் புற்றுநோயால் பாதிக்கப் பட்டு போராடி வருகிறார். எனவே தமக்கு பொருளா தார ரீதியில் உதவி செய்யுமாறு அவருடைய சார்பில் பிசிசிஐக்கு கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. அதற்கு பிசிசிஐயிடம் இருந்து எந்த அறிவிப்பும் வெளியாக வில்லை. இதனையடுத்து முன்னாள் ஜாம்பவான் கேப் டன் கபில் தேவ் தம்முடைய பென்சன் தொகையை தனது நண்பன் மற்றும் சக வீரரான அனுஸ்மானுக்கு கொடுப்பதாக அறிவித்தார். அத்துடன் மற்ற வீரர்களும் அவர்களுடைய குடும்பம் சம்மதித்தால் தங்களது பென் சன் தொகையை மருத்துவ உதவிக்கு கொடுக்கலாம் என கபில் தேவ் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் அன்ஷுமான் கெய்க்வாடுக்கு நிதியுதவி வழங்க உடனடியாக ரூ.1 கோடியை வழங்க பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா உத்தரவிட்டுள்ளார். மேலும் அவருடைய குடும்பத்தாரிடம் பேசி நிலை மையை விசாரித்து உதவிகளை வழங்கினார்.



தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்

விளக்கம்:

துன்பம் செய்யும் தீவினைகள் தன்னைவருத்துதலைவிரும்பாதவன், தீயசெயல்களைத் தான் பிறருக்குச் செய்யாமலிருக்க வேண்டும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.